# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 250/மா/2025
**நாள்: 03.03.2026**

B. சரவணன்,
சென்னை–600 017. --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர்,
மண்டலம்–5,
பெருநகர சென்னை மாநகராட்சி.

(2) உரிமையாளர்,
S.S. Hyderabad Biriyani,
சென்னை–600 001. --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவரின் 27.06.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.07.2025 அன்று பெறப்பட்டு 250/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.B.சரவணன் என்பவர் தனது 27.06.2025 நாளிட்ட மனுவுடன் இணைத்தனுப்பியுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "கதவு எண் 319/154 லிங்கி செட்டி தெரு, ஜார்ஜ் டவுன் சென்னை–600 001 என்கிற முகவரியில் தரைதளத்தில் சுமார் 5000 சதுரடியில் S.S. HYDERABAD BIRIYANI பிரியாணி ஓட்டல் சட்டவிதிமுறைகளை மீறி முறையான பார்க்கிங் வசதிகள் இல்லாமல் மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதை சாலைகளை சுமார் 10 அடி நீளம் 10 அடி அகலம் 15 அடி உயரத்தில் (LED) பல்புகளால் ஒளிரக்கூடிய ராட்சத விளம்பர பதாகைகள், கிச்சன் பார்சல் கட்டும் மேடைகள் அமைத்து முழுவதுமாக ஆக்கிரமிப்புகள் செய்துள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்பட வீடியோக்களில் காணலாம். இவ்வோட்டலுக்கு வரும் வாடிக்கையாளர்கள் சுகி (swiggy) ஜொமோட்டோ (ZOMATO) போன்ற நிறுவன ஊழியர்கள் சாலையிலும் நடைபாதைகளிலும் அங்கும் இங்கும் என கனரக மற்றும் இருசக்கர வாகனங்களை நிறுத்துவதால் கடும் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸ் தீயணைப்பு துறை வாகனம் இவ்வழியாக வந்து செல்ல பெரும் இடையூறாகவும் உள்ளது. பொது மக்களுக்கு மிகுந்த சிரமப்பட்டு தான் செல்ல வேண்டிய

நிலை உள்ளது. கர்ப்பிணிகள், மாற்று திறனாளிகள், சிறார்கள், வயதானவர்கள் என எவரும் பொதுப்பாதையான நடைப்பாதையை பயன்படுத்த முடியாமல் வேறுவழி இன்றி நடுசாலை வழியாக செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதனால் விபத்துகள் ஏற்பட்டு வரும் காலங்களில் உயிர் பலிகளும் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது. மேலும் இங்கு பணிசெய்யும் ஊழியர்கள் மஞ்சள்காமாலை, டைபாய்டு, தோல் நோய், தடுப்பு ஊசி செலுத்தினார்களோ இல்லையோ எவரும் சுகாதார சட்டவிதிகளின்படி முக உறை, தலை உறை, கை உறை உடல் பாதுகாப்பு ஆடைகள் என எதுவும் அணியாமலும் உணவு பறிமாறுகிறார்கள். சாப்பிட்டவுடன் உணவு கழிவுகள் தரம் சரிவர பிரிப்பதும் இல்லை. எங்கும் சுகாதாரம் இன்றி சுத்தம் இல்லாமல் அசுத்தமாக உள்ளது. தீயணைப்பு கருவிகள் இன்றியும் முறையான (தீயணைப்பான்) தீயணைப்பு மீட்பு பணிகள் சட்டவிதிகளின்படி பாதுகாப்பு கருவிகள் ஏதும் பொருத்தப்படவில்லை என்பதாலும் இவ்வோட்டலுக்கு வரும் வாடிக்கையாளர்கள் உயிர்களுக்கு பாதுகாப்பு அளித்து பொதுமக்களுக்கு இடையூறாகவும் சட்டவிதிகளை மீறி இயங்கி வரும் S.S. HYDERABAD BIRIYANI பிரியாணி உணவகம் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கவும், மேலும் 07.04.2025 அன்று இவ்வுணவகத்துக்கு தீயணைப்பு துறையிடம் முறையான அனுமதி பெற்று உள்ளனரா என்று கேள்விகள் எழுப்பி மனு அளித்தேன் மற்றும் 07.04.2025 அன்று போக்குவரத்து இணை ஆணையரிடம் R.T.I. அதிகாரியிடம் இவ்வுணவகத்துக்கு பார்க்கிங் வசதிகள் முறையாக அனுமதி வாங்கியுள்ளனரா என்று கேள்வி எழுப்பினேன். அதற்கு 15.05.2025 அன்று தீயணைப்புத் துறையிடம் உரிமம் மட்டும் தான் உள்ளது. N.O.C. வழங்கப்படவில்லை என்றும் அளித்த பதில் மனு பின்புறம் இணைப்பு போக்குவரத்து காவல் அதிகாரி, இணை ஆணையர் அவர்கள் அளித்த பதில் மனுவில் பார்க்கிங் அனுமதி எதுவும் பெறப்படவில்லை. N.O.C.யும் வழங்கப்படவில்லை என்று அளித்த பதில் மனுவின் நகல் இம்மனுவின் பின்புறம் இணைப்பு எவ்வித சட்டவிதிமுறைகளையும் பின்பற்றாமல் இயங்கும் ஓட்டல் உணவகத்தின் மீதும் விதி மீறல்களுக்கும் துணையாக சென்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் LI அவர்களிடம் புகாரை பற்றி செல்போனில் பேசும்போது அவ்வோட்டலுக்கு வாடிக்கையாளர்கள் உட்கார்ந்து சாப்பிடுவது இல்லை. டேபிள், சேர்கள் எதுவும் இல்லை என்றும், பார்சல் மட்டும் தான் என்றும் என்னிடம் கூறினார். அதிகாரி கூறியது மிகவும் அதிர்ச்சியடைய செய்தது. காரணம், புகைப்பட வீடியோ ஆதாரத்துடன் அளித்த புகாரை பார்த்தும் அவர் அப்படி பேசி நடந்துக் கொண்டது வேதனையாக உள்ளது. உடனடியாக L.I. அவர்கள் தொலைபேசி எண்ணுக்கு சேர், டேபில்கள் என என்னிடம் உள்ள வீடியோ ஆதாரங்களை அவர்களுக்கு அனுப்பினேன். அதன் பின் எனது போனை எடுப்பதே இல்லை. பல நூறு போன்கள் செய்து விட்டேன். புகார் நிலையை அறிந்துக் கொள்ள A.E. அவர்களும் ஆக்கிரமிப்பு புகாரைப்பற்றி கேட்கும்போது எல்லாம் இன்று, நாளை பார்க்கிறேன். செய்கிறேன் என்று நாட்களை கடத்தி ஆக்கிரமிப்புகளை அகற்றாமலும் சட்டப்படி தனது கடமைகளை செய்யாமலும் உள்ளார்கள். அலுவலகத்தில் நேரில் சென்று புகாரைப்பற்றி கேட்டபோது அதிகாரிகள் செல்போனில் வாழ்ந்துக் கொண்டும், வீடியோ பார்த்துக் கொண்டும் மெத்தனமாக அலட்சியமாக பதில் அளித்தனர். இதனால் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளேன். எனது புகார் மனுவின் மீது நடவடிக்கை எடுக்க உத்திரவிட கோரியும் இம்மனுவை தன் நல பொது நலத்துடன் மேல்முறை செய்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 18.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5–ன் மண்டல அலுவலர் 26.08.2025 நாளிட்டு தாக்கல் செய்த எழுத்துப்பூர்வ அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:–

(1) முதலாவதாக இதன் பிரதிவாதி புகாரில் கூறப்பட்டுள்ள ஒட்டுமொத்த குற்றச்சாட்டுகளையும் முற்றிலுமாக மறுக்கிறார். இதன் கீழ் குறிப்பிட்ட வகையில் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்பட்டவற்றைத் தவிர இதர விஷயங்களை இந்த

மாண்புமிகு நீதிமன்றத்தின் முன் நிரூபிக்க வேண்டியது இதன் மனுதாரரின் கடப்பாடாகும்.

(2) இந்த பிரதிவாதி மேலும் பணிவோடு சமர்ப்பித்துக் கொள்வதாவது, இதன், மனுதாரர் நடைபாதைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு, மற்றும் எந்த வாகன நிறுத்துமிட வசதியும் இல்லாமல் சட்டவிரோதமாக வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது தொடர்பாக S.S. ஹைதராபாத் பிரியாணி விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறிய அதிகாரிகள் மீது பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு நிவாரணம் வழங்குமாறு கோரி இந்த தாக்கல் செய்துள்ளார்.

(3) இங்கு மேலும் சமர்ப்பித்துக் கொள்வதாவது, பெறப்பட்ட புகாரைப் பெற்றவுடன், மனுதாரரின் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இதன் பிரதிவாதி மாநகராட்சி, அதன் கீழான, வருவாய்த் துறை, சுகாதாரத் துறை மற்றும் பொறியியல் துறை உட்பட அதன் அனைத்து துறைகளையும் சார்ந்த அதிகாரிகளுக்கும் ஒரு உள்ளக சுற்றறிக்கையை அனுப்பியது.

(4) இங்கு மேலும் சமர்ப்பித்துக் கொள்வதாவது, மேற்கூறிய உள்ளக தகவல் தொடர்பு அறிக்கையைத் தொடர்ந்து அதனடிப்படையில் இதன் பிரதிவாதி, மாநகராட்சி அதிகாரிகள் சம்பந்தப்பட்ட வளாகத்தை நேரடியாக ஆய்வு செய்தார்கள். அந்த குறிப்பிட்ட கடையானது லிங்கி செட்டி தெருவில் தற்காலிக கட்டமைப்பை அமைத்து, அந்த சாலை ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதை கண்டறிந்தனர். அதன்படி, 29.05.2025 அன்று பிராந்திய துணை ஆணையரின் உத்தரவுகள் பெறப்பட்டு, பிரிவு 128 தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 2022 (சாலை/தெரு/சந்து நடைபாதை மற்றும் நீர்நிலைகளை ஆக்கிரமித்தல்)இன் கீழ், S.S. ஹைதராபாத் பிரியாணி பிரைவேட் லிமிடெட் உரிமையாளருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

(5) மேலும் திரு. S. அப்துல் சமத், புதிய உரிமக் குறையீடு: 05–060–0000029 இன் கீழ் S.S. HYDERABAD BIRIYANI PVT LTD. என்ற பெயரில் மற்றும் வகைப்பிரிவில் தனது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முறையான உரிமத்தை வைத்திருக்கிறார். மேற்கண்ட உரிமம் 31.03.2028 வரை செல்லத்தக்கதாகும்.

(6) இங்கு மேலும் சமர்ப்பித்துக் கொள்வதாவது, குறிப்பிட்ட திரு. S. அப்துல் சமத் அதற்குரிய தொழில் வரியை 25.01.2025 தேதியிட்ட ரசீது எண் 2024–25/ON/1748289இன் மூலம் II/2024–25 வரை எந்த நிலுவைத் தொகையும் இல்லாமல் முறையாக செலுத்தியுள்ளார். மேலும், மேற்கூறிய கடையில் வழங்கப்படும் சமைத்த உணவு வேறு ஒரு இடத்தில் அவர்களின் கேன்டீனில் இருந்து தயாரிக்கப்பட்டு இங்கு இடமாற்றம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. மாற்றப்படுகிறது. உணவு வெளியில் இருந்து தயாரிக்கப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டு விற்பனைச் செய்யப்படுவதால் மாற்றப்படுவதால், மேற்குறிப்பிட்ட கடையில் எந்த ஒரு சுத்திகரிப்பு அல்லது சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளும் காணப்படவில்லை. அதற்கும் மேலாக, கடையை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பராமரித்து வருமாறு கடை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மேலும் கடை பணியாளர்கள் உணவுகளை பரிமாறும் போது அடிப்படை சுகாதார நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும், தவிர அவ்வாறு பின்பற்றி நடப்பதை தொடர்ந்து அங்கேயே அப்போதே இதன் பிரதிவாதிகள் கண்காணித்து வருகிறார்கள். மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் தகவல்கள் 11.07.2025 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(7) இங்கு சமர்ப்பித்துக் கொள்வதாவது, குறிப்பிட்ட S.S. ஹைதராபாத் பிரியாணி பிரைவேட் லிமிடெட் நிறுவனம் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை மட்டுமே தங்கள் வணிகத்தை மேற்கொள்ள வேண்டும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட வர்த்தக உரிமம் மற்றும் தொழில்முறை வரி கணக்கு இருந்த போதிலும், கூடுதலாக தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு சேவைகள் வழங்கிய 20.08.2025

தேதியிட்ட உரிம எண் 18061/RFL/NMSB/2025 இன் கீழ் அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் வரை செல்லுபடியாகும் உரிமத்தையும், மற்றும் தமிழ்நாடு கேட்டரிங் நிறுவன விதிகள், 1959 ஆல் வழங்கப்பட்ட 31.12.2025 வரை செல்லுபடியாகும் TNCHEAIL5CHECE19-00166 கீழான பதிவுச் சான்றிதழும் அந்தக் கடைக்கு இருக்கிறது.

(8) இங்கு பணிவோடு சமர்ப்பித்துக் கொள்வது என்னவென்றால், இதன் பிரதிவாதி அதிகாரிகள் விடாமுயற்சிகளை மேற்கொண்டு, தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு உட்பட்டு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர். மனுதாரரின் பிரதிநிதித்துவத்துக்கு இணங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இதன் பிரதிவாதி அதிகாரிகள் எந்த ஒரு அலட்சியப் போக்கையோ அல்லது தவறுதலையோ செய்யவில்லை. குறிப்பிட்ட கடை தொடர்பாக தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இதன் பிரதிவாதிகள் எடுத்திருக்கின்றபடியால், மனுதாரரின் இந்த தற்போதைய புகார் எந்த ஒரு பயனுமற்றது.

(9) மேலே குறிப்பிட்டவற்றைத் தவிர, இதன் பிரதிவாதியானவர் தனது ஆய்வின் போது மேலும் சில கூடுதல் தகவல்களைச் சேகரித்தார். அதாவது இதன் மனுதாரர் ஏற்கனவே W.P. No. 36239/2023 இன் கீழ் ஒரு ரிட் மனுவை தாக்கல் செய்து 03.11.2025 தேதியிட்ட மனுதாரர் பிரதிநிதித்துவத்தை முடித்து வைக்குமாறு இதன், 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கு உறுத்துக் கட்டளை பிறப்பிக்கவும் அதன் விளைவாக சென்னை சைதாப்பேட்டையில் S.S. ஹைதராபாத் பிரியாணி ஹோட்டல் நடத்த 6வது பிரதிவாதிக்கு ஆதரவாக வழங்கப்பட்ட உரிமம் மற்றும் N.O.C. சான்றிதழை ரத்து செய்து நிவாரணம் வழங்க கோரியுள்ளார்.

(10) அதன்படி, மேற்கூறிய ரிட் மனு 08.01.2024 அன்று பின்வரும் வழிகாட்டுதல்களுடன் முடித்து வைக்கப்பட்டது.

மனுதாரர் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் திரு. டி. பாரதி மற்றும் பிரதிவாதிகள் 1 மற்றும் 5 சார்பாக ஆஜரான கற்றறிந்த நிலை ஆலோசகர் திரு. ஏ. அருண்பாபு ஆகியோரின் வாதங்கள் கேட்கப்பட்டன.

2. இந்த மனு, எந்த ஒரு அதிகாரபூர்வமான ஆவணங்களும் முறைப்படி பதிவு செய்யப்படாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதன் காரணமாக இந்த தற்போதைய மனுவை அனுமதிக்க முடியாது.

3. அதன்படி இந்த ரிட் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. பாதிக்கப்பட்ட நபருக்கு இது தொடர்பான அதிகாரபூர்வமான ஆவணங்கள் கிடைக்கும் பட்சத்தில் பாதிக்கப்பட்ட நபர் மீண்டும் இதுகுறித்து புதிதாக புகார் தாக்கல் செய்யலாம். செலவுகள் குறித்து எந்த ஒரு உத்திரவும் இல்லை.

(11) இங்கு சமர்ப்பித்துக் கொள்வதாவது, இதன் மனுதாரர் மேற்கண்ட ரிட் மனுவை S.S. ஹைதராபாத் பிரியாணி பிரைவேட் லிமிடெட் சைதாப்பேட்டை கிளைக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். தற்போதைய புகார் S.S. ஹைதராபாத் பிரியாணி பிரைவேட் லிமிடெட், ஜார்ஜ் டவுன் கிளைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் கூடுதலாக மற்ற இதர கிளைகள் மீதும் சில புகார்கள் நிலுவையில் உள்ளன. மனுதாரர் தான் ஒரு சமூக சேவகர் என்றும், சமூகப் பிரச்சனைகளுக்கு எதிராகப் போராடுபவர் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஒரு சமூக சேவகராக புகார் அளிக்கும் போது நகரத்தின் பல்வேறு பகுதிகளில் தனது கிளைகளைக் கொண்டுள்ள S.S.ஹைதராபாத் பிரியாணி பிரைவேட் லிமிடெட் மீது மட்டுமே, எந்தவொரு முகாந்திரமும் இல்லாமல் தவறான மற்றும் எந்த ஒரு அடிப்படையில்லாத குற்றச்சாட்டுகளைக் கூறி, பல்வேறு அமைப்புகள் முன்பாக தொடர்ந்து பல புகார்களை தாக்கல் செய்து வருகிறார் என்பது, அவரது நோக்கம் குறித்து சந்தேகத்தை எழுப்புகிறது. எனவே, மனுதாரரின் இந்த தற்போதைய புகாருக்கு தீர்வு காணும் முன்பாக, மனுதாரரின் நோக்கத்தையும் அவரது புகாரின்

உண்மைத் தன்மையையும் இந்த மாண்புமிகு தீர்ப்பாயம் சரிபார்க்க வேண்டும் என்று பணிவோடு பிரார்த்திக்கப்படுகிறது. மனுதாரர் பிரதிவாதி நிறுவனத்துக்கு தேவையற்ற பிரச்சனைகளை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், இந்த மாண்புமிகு தீர்ப்பாயத்தின் மதிப்புமிக்க நேரத்தையும் வீணடிக்கிறார்.

(12) இங்கு சமர்ப்பித்துக் கொள்வதாவது, மனுதாரர் தனது சொந்த சுயநலத்தை நோக்கமாக கொண்டு பிரதிவாதிக்கு எதிராக இத்தகைய அடிப்படை ஆதாரமற்ற மற்றும் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார். மனுதாரரின் பிரதிநிதித்துவத்துக்கு இணங்க செயல்படுவதில் இதன் பிரதிவாதிகள் மேற்கொண்ட எந்த ஒரு நடவடிக்கைகளுக்கு எதிராக இதன் மனுதாரர் எந்த ஒரு குறிப்பிட்ட வகையிலான மறுப்பையும் தெரிவிக்கவில்லை அல்லது எந்த ஒரு குறையையும் எடுத்துக்காட்டவில்லை.

(13) இதன் பிரதிவாதி சமர்ப்பித்துக் கொள்வதாவது, இதன் மனுதாரர் தீய நோக்கத்துடன் மற்றும் சுயநலத்துடன் இந்த மாண்புமிகு தீர்ப்பாயத்தை அணுகியுள்ளார். இந்த உறுதிமொழி ஆவணத்தை மேலோட்டமாகப் பார்த்தாலே, இந்த தற்போதைய புகாரை இதன் மனுதாரர் நீதி மன்ற நடைமுறைகளை தவறாகப் பயன்படுத்தும் நோக்கத்துடன், தாக்கல் செய்துள்ளார் என்பது வெளிப்படையாகத் தெளிவாகத் தெரியும்.

(14) புகாரில் கோரப்பட்ட நிவாரணங்களை பெற மனுதாரருக்கு எந்த ஒரு உரிமையும் இல்லை என்று இதன் பிரதிவாதி சமர்ப்பித்துக் கொள்கிறார். இதன் பிரதிவாதிகள் அலட்சியமாக நடந்து கொண்டார்கள் என்பதை நிரூபிக்க இதன் மனுதாரர் தவறிவிட்டார். மேலே சமர்ப்பிக்கப்பட்ட உண்மைகளை சமர்ப்பிப்புகளைக் கருத்தில் கொண்டு, இந்த தற்போதைய புகார் தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

எனவே மனுதாரர் தாக்கல் செய்த புகாரை தள்ளுபடி செய்து, நீதி வழங்குமாறு பணிவுடன் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

<u>சரிபார்ப்பு</u>

நான் சி. விஜய் பாபு, மண்டல அதிகாரி, மண்டலம் V, சென்னை மாநகராட்சி, இதன் மூலம் அறிவித்துக் கொள்வது என்னவென்றால், மேலே கூறப்பட்ட தகவல்கள் அனைத்தும் இருக்கக்கூடிய பதிவேடுகளின்படி எனது அறிவுக்கு எட்டியவரை மற்றும் எனது நம்பிக்கையின் அடிப்படையில் உண்மையானவை மற்றும் சரியானவை இன்று 2025 ஆகஸ்ட் மாதம் சென்னையில் சரிபார்க்கப்பட்டது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.01.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 15.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 09.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''கதவு எண் 319/154 லிங்கி செட்டி தெரு, ஜார்ஜ் டவுன் சென்னை–600 001 என்கிற முகவரியில் தரைதளத்தில் சுமார் 5000 சதுரடியில் S.S. HYDERABAD BRIYANI பிரியாணி ஓட்டல் சட்டவிதிமுறைகளை மீறி முறையான பார்க்கிங் வசதிகள் இல்லாமலும், மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையை சுமார் 10 அடி நீளம் 10 அடி அகலம் 15 அடி உயரத்தில் (LED) பல்புகளால் ஒளிரக்கூடிய ராட்சத விளம்பர பதாகைகள் கிச்சன் பார்சல் கட்டும் மேடைகள் அமைத்து முழுவதுமாக ஆக்கிரமிப்புகள் செய்து உள்ளதால் சுகி மற்றும் ஜுமேட்டோ நிறுவன ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் தங்களது இருசக்கர வாகனங்களை நிறுத்துவதால் கடும் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸ், தீயணைப்பு துறை வாகனம் இல்லாமலும், கர்ப்பிணிகள், மாற்று திறனாளிகள், சிறார்கள், வயதானவர்கள் என எவரும் நடைப்பாதையை பயன்படுத்த முடியாமல் வேறுவழி இன்றி நடுசாலை வழியாக செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதனால் விபத்துகள் ஏற்பட்டு வரும்

காலங்களில் உயிர் பலிகளும் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது. மேலும் இங்கு பணிசெய்யும் ஊழியர்கள் எவரும் சுகாதார சட்டவிதிகளின்படி முகஉறை, தலை உறை, கை உறை உடல் பாதுகாப்பு ஆடைகள் என எதுவும் அணியாமலும் உணவு பரிமாறுகிறார்கள். சாப்பிட்டவுடன் உணவு கழிவுகள் தரம் சரிவர பிரிப்பதும் இல்லை. தீயணைப்பு கருவிகள் இன்றியும் முறையான (தீயணைப்பான்) தீயணைப்பு மீட்பு பணிகள் சட்டவிதிகளின்படி பாதுகாப்பு கருவிகள் ஏதும் பொருத்தப்படவில்லை. எனவே, சட்டவிதிகளை மீறி சென்னை–1, ஜார்ஜ்டவுன் லிங்கிசெட்டி தெரு, கதவு எண்.319/154ல் இயங்கி வரும் S.S. HYDERABAD BRIYANI பிரியாணி உணவகம் மீதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீதும், உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.''

6. முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவிப் பொறியாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 09.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் குறிப்பிடும் கடையானது லிங்கி செட்டி தெருவில் தற்காலிக கட்டமைப்பை அமைத்து, அந்த சாலை ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதை கண்டறியப்பட்டு, உரிய தாக்கீது வழங்கப்பட்டு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது. ஆனால், தற்போது மீண்டும் தற்காலிக கடை அமைத்துள்ளதாக மனுதாரர் தெரிவித்த நிலையில் மீண்டும் கள ஆய்வு செய்து ஆக்கிரமிப்பை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு மனுதாரர் தெரிவித்தவாறு நிரந்தரமான கட்டமைப்பு ஏதும் இல்லை.

மேற்கண்ட உணவகத்தின் உரிமையாளர் உணவகத்திற்கான வர்த்தக உரிமம் பெற்றுள்ளார்.

மேற்கண்ட உணவகத்திற்கு தீயணைப்பு துறையிடமிருந்தும், போக்குவரத்து காவல் துறையிடமிருந்து NOC பெறப்பட்டது குறித்த தகவல் எங்கள் அலுவலக பிரிவில் தகவல் ஏதும் இல்லை. இத்தகவல் வருவாய் துறை பிரிவை சேர்ந்தது ஆகும்.

எனவே, மனுதாரர் குறிப்பிட்டுள்ள NOC தொடர்பான புகார்கள் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் வருவாய் துறையினர்தான் விளக்கம் அளிக்க இயலும் என்பதால், வேறு ஒரு தேதி வழங்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

7. இரண்டாம் எதிர்மனுதாரரான S.S. HYDERABAD BRIYANI உரிமையாளர் 09.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

8. முதலாம் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் சார்பாக 09.01.2026 அன்றைய விசாரணையில் ஆஜரான உதவிப்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் கோரியவாறு, மனுதாரரின் முறையீட்டு மனு சம்பந்தமாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 30.01.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு எதிர்மனுதாருக்கு முகவரியிட்டு, மனுதாரர் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான S.S. HYDERABAD BRIYANI உரிமையாளர் ஆகியோருக்கு நகலிடப்பட்டு, 13.01.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

9. இந்நிலையில், முதலாம் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவலரின் 30.01.2026 நாளிட்ட எழுத்துபூர்வமான கூடுதல் அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"The Respondent submits as follows:

1. It is submitted that the written statement filed by the Respondent on 04.09.2025 may be read as part and parcel of this additional written statement.
2. It is submitted that Mr. S. Abdul Samad holding a proper licence to carry his trade in New Lincence Code:05-060-0000029 in the name and style of "SS HYDERABAD BRIYANI PVT LTD.," The above licence valid upto 31.03.2028. The above said licence was issued in the year 2013 after inspecting the subject building as per the provision of Section 279 of the Chennai City Municipal Corporation Act, 1919.
3. Despite the above-mentioned Trade Lincence and Professional Tax, the said shop holding the Tamil Nadu Fire and Rescue Services Licence in Licence No.18061/RFL/NMSB/2025 dated 20.08.2025 valid upto Three Years from the date of issue and having Registration.
4. It is submitted that the division bench comprised by the HONOURABLE Mr. JUSTICE M. VENUGOPAL AND THE HONOURABLE Mr. JUSTICE S. VAIDYANATHAN in their order dated 27.07.2018 has directed that "Admittedly. it is very clear that no Hotel shall be permitted to run without obtaining 'No objection Certificate / Licence' from the Commissioner for the first time under the relevant provisions of Chennai City Police Act, 1888. Fresh establishments will have to obtain 'No Objection Certificate' / Trade Licence and other certificates that are required by the Corporation. If Trade License had already been obtained for eating house, boarding house, lodging house and the same is already in existence, no notice like the present one dated 23.07.2018 can be issued".
5. It is respectfully submit that as per the above order the present "SS HYDERABAD BRIYANI PVT LTD" is already in existence at the time of issuance of the above said judgement, hence Police NOC is not mandated for the issuance of renewal of License by the respondent for the said shop.

By considering the above facts, it is therefore humbly prayed to pass appropriate orders as deemed fit and proper and thus render justice." எனத் தெரிவித்துள்ளார்.

10. மனுதாரர் 30.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"09.01.2026 அன்று இம்மன்ற நடுவர் முன்பு என்னால் அளிக்கப்பட்ட வாக்குமூலத்தின் தொடர்ச்சியாக இன்று 30.01.2026 பின்வரும் விவரங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

கதவு எண் 319/154 லிங்கி செட்டி தெரு, ஜார்ஜ் டவுன் சென்னை–600 001 என்கிற முகவரியில் தரைதளத்தில் சுமார் 800 சதுரடியில் S.S. HYDERABAD BRIYANI பிரியாணி ஓட்டலுக்கு தீயணைப்பு துறையிடமிருந்து உரிமம் பெற்றுள்ளார்கள். ஆனால் போக்குவரத்து துறையிடமிருந்து முக்கியமாக NOC பெறப்படவில்லை. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் அலுவலர்களால் இன்றைய விசாரணையில் தெரிவித்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் S.S. HYDERABAD BRIYANI பிரியாணி ஓட்டல் பெற்றுள்ள ஆவண நகல்களை எனக்கு

வழங்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

**11.** முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் உரிமம் ஆய்வாளர் மற்றும் வருவாய் அலுவலர் ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு **30.01.2026** அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"**09.01.2025** அன்று இம்முறைமன்றத்தில் நடைபெற்ற விசாரணையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் உதவிப்பொறியாளர் அளித்த வாக்குமூலத்தின் தொடர்ச்சியாக பின்வரும் விவரங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

கதவு எண் **319/154** லிங்கி செட்டி தெரு, ஜார்ஜ் டவுன் சென்னை–**600 001** என்கிற முகவரியில் இயங்கும் S.S. HYDERABAD BRIYANI பிரியாணி ஓட்டலின் உரிமையாளர் பின்வரும் உரிமங்களை பெற்றுள்ளார்.

(1) Licence for Trade or Business dated 04.02.2025 (Valid up to 31.03.2028).

(2) Licence issued by Tamil Nadu Fire and Rescue services dated 20.08.2025.

(3) Licence under FSS Act 2006 by the Government of Tamil Nadu dated 10.02.2025. (Valid up to 22.02.2026).

(4) Certificate of Verification issue by the Government of Tamil Nadu dated 25.11.2025.

இது தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் **27.07.2018** தேதியிட்ட தீர்ப்பில் பின்வருமாறு ஆணையிட்டுள்ளது. "Admittedly. it is very clear that no Hotel shall be permitted to run without obtaining 'No objection certificate / Licence' from the Commissioner for the first time under the relevant provisions of Chennai City Police Act,1888. Fresh establishments will have to obtain 'No Objection Certificate' / Trade Licence and other certificates that are required by the Corporation. If Trade License had already been obtained for eating house, boarding house, lodging house and the same is already in existence, no notice like the present one dated 23.07.2018 can be issued".

மேற்கண்ட தீர்ப்பின்படி S.S.HYDERABAD BRIYANI பிரியாணி ஓட்டல் **2013**ம் ஆண்டிலிருந்து தொழில் உரிமம் பெற்று இயங்கி வருவதால் உரிமம் புதுப்பிக்கப்படும் போது (Renewal), தீயணைப்பு துறை மற்றும் போக்குவரத்து துறை ஆகியவற்றின் தடையில்லா சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட தேவையில்லை.

மேலும், உணவகங்கள் தொழில் உரிமம் புதுப்பிக்கப்படும் போது (Renewal) எவ்வித சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்பட தேவையில்லை.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள உரிமம் நகல்களை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

எனவே, S.S. HYDERABAD BRIYANI பிரியாணி ஓட்டல் முறையான உரிமம் பெற்று இயங்கி வருகிறது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.''

**12.** முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலங்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5–ன் மண்டல அலுவலரின் அறிக்கைகள், உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் உரிமம் ஆய்வாளர் மற்றும் முதுநிலை வருவாய் அலுவலரின் வாக்குமூலம்

ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

கதவு எண் 319/154 லிங்கி செட்டி தெரு, ஜார்ஜ் டவுன் சென்னை–600 001 என்கிற முகவரியில் தரைதளத்தில் சுமார் 5000 சதுரடியில் S.S. HYDERABAD BRIYANI பிரியாணி ஒட்டல் சட்டவிதிமுறைகளை மீறி முறையான பார்க்கிங் வசதிகள் இல்லாமலும், மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையில், LED பல்புகளால் ஒளிரக்கூடிய ராட்சத விளம்பர பதாகைகள், கிச்சன், பார்சல் கட்டும் மேடைகள் அமைத்து முழுவதுமாக ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டுள்ள இடத்தில், சுகி மற்றும் ஜூமேட்டோ நிறுவன ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் தங்களது இருசக்கர வாகனங்களை நிறுத்துவதால் கடும் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸ், தீயணைப்பு துறை வாகனம் இல்லாமலும், கர்ப்பிணிகள், மாற்று திறனாளிகள், சிறார்கள், வயதானவர்கள் என எவரும் நடைப்பாதையை பயன்படுத்த முடியாமல் வேறுவழி இன்றி நடுசாலை வழியாக செல்ல வேண்டிய நிலை உள்ளதனால், விபத்துகள் ஏற்பட்டு, வரும் காலங்களில் உயிர் பலிகளும் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது என்பதும், இங்கு பணிசெய்யும் ஊழியர்கள் எவரும் சுகாதார சட்டவிதிகளின்படி முக உறை, தலை உறை, கை உறை உடல் பாதுகாப்பு ஆடைகள் என எதுவும் அணியாமலும் உணவு பரிமாறுகிறார்கள். மற்றும் சாப்பிட்டவுடன் உணவு கழிவுகள் தரம் சரிவர பிரிப்பதும் இல்லை மற்றும் தீயணைப்பு கருவிகள் இன்றியும் முறையான (தீயணைப்பான்) தீயணைப்பு மீட்பு பணிகள் சட்டவிதிகளின்படி பாதுகாப்பு கருவிகள் ஏதும் பொருத்தாமல், சட்டவிதிகளை மீறி மேற்கண்ட பிரியாணி உணவகம் மீதும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பதும், மேற்கண்ட பிரியாணி ஒட்டலுக்கு தீயணைப்பு துறையிடமிருந்து உரிமம் பெற்றிருந்தாலும், போக்குவரத்து துறையிடமிருந்து முக்கியமாக NOC பெறப்படவில்லை என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் அலுவலர்களால் 30.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் தெரிவித்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் S.S. HYDERABAD BRIYANI ஒட்டல் பெற்றுள்ள ஆவண நகல்களை தனக்கு வழங்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு கோரியிருப்பதும் மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிடும் சென்னை–600 001, ஜார்ஜ் டவுன், லிங்கி செட்டி தெருவில் உள்ள S.S. HYDERABAD BRIYANI கடையானது தற்காலிக கட்டமைப்பை அமைத்து, அந்த சாலை ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதை கண்டறியப்பட்டு, உரிய தாக்கீது வழங்கப்பட்டு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்பதும், தற்போது மீண்டும் தற்காலிக கடை அமைத்துள்ளதாக மனுதாரர் தெரிவித்த நிலையில் மீண்டும் கள ஆய்வு செய்து ஆக்கிரமிப்பை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், அங்கு மனுதாரர் தெரிவித்தவாறு நிரந்தரமான கட்டமைப்பு ஏதும் இல்லை என்பதும், மேற்கண்ட உணவகத்தின் உரிமையாளர் உணவகத்திற்கான தேவையான வர்த்தக உரிமங்களை பெற்றுள்ளார் என்பதும், வர்த்தக உரிமங்கள் தொடர்பாக, மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் 27.07.2018 தேதியிட்ட தீர்ப்பின்படி, S.S.HYDERABAD BRIYANI பிரியாணி ஒட்டல் 2013ம் ஆண்டிலிருந்து தொழில் உரிமம் பெற்று இயங்கி வருவதால் உரிமம் புதுப்பிக்கப்படும் போது (Renewal), தீயணைப்பு துறை மற்றும் போக்குவரத்து துறை ஆகியவற்றின் தடையில்லா சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட தேவையில்லை என்பதும், உணவகங்கள் தொழில் உரிமம் புதுப்பிக்கப்படும் போது (Renewal) எவ்வித சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்பட தேவையில்லை என்பதும், S.S. HYDERABAD BRIYANI பிரியாணி ஒட்டல் முறையான உரிமம் பெற்று இயங்கி வருகிறது என்பதும் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவலரின்

அறிக்கை, உதவி செயற்பொறியாளர், உரிமம் ஆய்வாளர் மற்றும் முதுநிலை வருவாய் அலுவலர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், சென்னை–600 001, ஜார்ஜ் டவுன், லிங்கி செட்டி தெரு, கதவு எண் 319/154 என்கிற முகவரியில் உள்ள தரைதளத்தில் இயங்கி வரும் S.S. HYDERABAD BRIYANI ஒட்டல், மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு எண் W.P.No.33821 of 2014 நாள் 27.07.2018–ல் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், ஏற்கனவே 2013 ஆண்டிலிருந்து மேற்கண்ட உணவகம் தொழில் உரிமம் பெறப்பட்டுள்ளதாலும், மேலும் உரிமம் ஆய்வாளர் மற்றும் முதுநிலை வருவாய் அலுவலர் ஆகியோர் தொழில் உரிமம் புதுப்பிக்கும் போது எவ்வித சான்றிதழ்களும் சமர்ப்பிக்க தேவையில்லை என்று தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், தொழில் உரிமம் குறித்தான மனுதாரரின் புகார் தொடர்பாக மேல் நடவடிக்கை எடுப்பதற்கான அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவிப் பொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மேற்கண்ட நிறுவனம் அமைந்துள்ள இடத்தினை மீண்டும் கள ஆய்வு செய்து ஆக்கிரமிப்பு உள்ளதா என்பதை கண்டறிந்து, அதனடிப்படையில், அதனை அகற்ற உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவலரை அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. B.சரவணன்,
கதவு எண் 1, புது தெரு,
தியாகராய நகர், சென்னை–600 017.

(2) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 5,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 61, பேசின் பிரிட்ஸ் சாலை, சென்னை–600 021.

(4) உரிமையாளர்,
S.S. HYDERABAD BRIYANI ஒட்டல்,
கதவு எண் 154/319, லிங்கி செட்டி தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை–600 001.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

5/3/26
செயலாளர்.
5.3.26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032